**OS.NO. 32/2023      PW-1**

நாள் : 01.09.2025

பெயர் : தோகைமணி

த/பெ : யாதவன்

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது நிலத்தில் கால்வாய் அத்துமீறி எனது ஊர்த்தலைவரான வளர்மதியின் கணவர் நந்தகுமார் அமைத்துள்ளார். தாவா சொத்து எனக்கு தான் உரிமை என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் கிரய பத்திரம் போன்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் உரிமை கோரும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த திசையில் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாவா சொத்தின் தெற்கு புறம் கிழக்கு – மேற்காக கால்வாய் அமைத்துள்ளார்கள். எனது தம்பி பெயர் கண்ணப்பன் என்றால் சரிதான். கண்ணப்பன் என்பவரும் இது போன்ற ஒரு வழக்கை பிரதிவாதி மீது ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு உரிமை இல்லை என்பதால் அதில் அரசு தரப்பில் கால்வாய் எடுத்துள்ளதை எதிர்த்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆகவே வழக்கை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தம்பி கண்ணப்பன் என்றால் சரிதான். அவர் எங்கு உள்ளார் என்றால் சிங்கப்பூரில் உள்ளார். எவ்வளவு ஆண்டுகளாக உள்ளார் என்றால் 10 வருடமாக உள்ளார். அங்கு குடியுரிமை வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

விழாக்களுக்கு மட்டும் தான் ஊர் வந்து செல்வார் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கும் எனது தம்பிக்கும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எங்கள் இருவர் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு உரிமை பத்திரங்கள் உள்ளதா என்றால் எனது அப்பா எனக்கும் என் தம்பிக்கும் எழுதி வைத்த பத்திரம் உள்ளது. அந்த பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டாவில் நீளம், அகலம் மற்றும் செக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நான் ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா தாக்கல் செய்தால் போதும் என்று நினைத்து பத்திரம் தாக்கல் செய்யவில்லை.

என் தம்பியும் இந்த பிரதிவாதி மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் நான் கூட்டு பட்டா சொத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் அவர் அவரது சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார். எனது தாவா சொத்து விவரத்தில் நான் வழக்கு சொத்திற்கான செக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் நிலத்திற்கும் ரோட்டிற்கும் நடுவில் தான் கால்வாய் செல்கிறது என்றால் சரியல்ல. எனது சர்வே எண் 479/1 ல் தான் கால்வாய் உள்ளது. எனது நிலத்திற்கு அடுத்து கால்வாய், கால்வாய்க்கு அடுத்து ரோடு உள்ளது என்றாலும் எனது பத்திரத்தை தாக்கல் செய்தால் அது தெரிந்துவிடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல.

கால்வாய் கட்டுவதற்கு கான்ரெக்ட் விடுவது யார் என்றால் BDO அலுவலகத்தில் விடுகிறார்கள். BDO நிதி வைத்து தான் கால்வாய் டென்டர் விட்டார்கள் என்றால் சரிதான். அது கழிவு நீர் கால்வாய் ஆகும். நீர் பாய்ச்சும் கால்வாய் அல்ல. ஊர் தலைவரின் பணத்தை கொண்டு கால்வாய் அமைப்பது இல்லை என்றால் சரிதான், அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்றால்

சரிதான். அந்த கால்வாய்க்கு ஒப்பந்ததாரர் 3 ம் பிரதிவாதி வளர்மதி ஆவார். ஒப்பந்ததாரரா இருக்கு ஊர் தலைவருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியின் கணவர் மீதுள்ள தனிப்பட்ட பகையின் மீது தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் நான் சுற்றுசுவர் எழுப்பி உள்ளேனா என்றால் இல்லை. கால்வாய் அமைந்துள்ள சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் அதை ஊர்தலைவர் கேட்கவே இந்த வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் கால்வாய் ரோட்டு புறப்போக்கில் தான் அமைக்கப்பட்டுள்ளது என்றாலும் தகுந்த சர்வேயர் கொண்டு அளந்து பார்த்து தான் அமைக்கப்பட்டது என்றாலும் சரியல்ல சம்மந்தப்பட்ட சர்வேயர் அளக்கவில்லை. கிராம நிர்வாக அலுவலர், குக்குண்டி அவர்கள் தான் வந்து அளந்தார். எனது ஊர் பெயர் கே.வேலூர் ஆகும். உரிய ஆவணம் இல்லாமல் இந்த வழக்கு பரிகாரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.09.02 10:40:34 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.